குமரி அறிவியல் பேரவை

# கடலோர சூழியல் ஆய்வுப்பயணம்

(நீரோடி முதல் வட்டக்கோட்டை வரை)

ஜனுவரி 17,18-2009

பேரன்புடையீர்!

வணக்கம். 19 ஆம் நுற்றாண்டின் இறுதியில் துவங்கிய இயந்திரப்புரட்சி முதன் முதலாய் நுகர்வோர் உலகத்தை உருவாக்கியது. காற்று மட்டுமலல்ல மட்காத திடக்கழிவுகளைக் குவித்து நாளுக்குநாள் நிலமும் மாசுபட்டது. மக்கள் தொகை அதிகரிப்பும் நகர மயமாதலும் கழிவுகள் மேலும் கூடுவதற்குக் காரணமாய் அமைந்தன. கழிவுகள், மட்கும் கழிவுகள் என்றும் மட்காத கழிவுகள் என்றும் இருவகைகளாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன.

மட்காத கழிவான பிளாஸ்டிக் பெரும்பாதிப்புகளை உருவாக்குகின்றன. இது மண்ணின் நீர்வளத்தைக் குறைக்கின்றது. தாவர வளர்ச்சியைப் பாதிக்கச் செய்கின்றுது.இது எரிப்பதின் மூலம் வெளிவரும் விஷவாயு புற்றுநோய் போன்ற வியாதிகளை உருவாக்குகின்றது.. எந்த திடப்பொருட்களை எரிக்கும்போதும் நச்சுப்புகைகளான கார்பன் மோனாக்சைடு, ஹைட்ரஜன் ஆக்ஸைடுகள் கந்தக டைஆக்ஸைடு, டையாக்ஸின் ப்யூரான் மற்றும் நச்சுத்துகள்கள் வெளிவருகின்றன. இதன் மூலம் கண்,மூக்கு, தொண்டை, தோல் ஆகியவைகளில் எரிச்சல் ஏற்படுகின்றது. மேலும் சுவாசம் சம்பந்தமான நோய்களான ஆஸ்துமா, மூச்சுத்திணறல் மற்றும் இதர நலக்கேடுகள் ஏற்படுகின்றது.

இதன் பெரும்விளைவால் வெப்பநிலை உயர்ந்து பனிப்பாறைகள் உருகி கடல் நீர்மட்டம் உயர்ந்து பல நாடுகள் மூழ்கும் அபாயநிலை ஏற்பட்டுள்ளது. விஷவாயு வெளிவருவதால் அமில மழை ஏற்பட்டு, தாவர விலங்கு செல்களுக்கு மீட்கமுடியாத பாதிப்பை ஏற்படுத்துகிறது .

நீர் மாசு அடைவதால் தொற்று நோய்களனான சிக்கன்குனியா, டெங்கு காய்ச்சல் ,மலேரியா யானைக்கால் வியாதி போன்ற கொசுக்களால் பரவும் நோய்கள் அதிகரித்துள்ன. அண்மையில் ஏற்பட்ட இயற்கைப்பேரிடராகிய சுனாமிக்குக் காரணமும் இதுவே.

கடலோரங்களில் ஏற்படுகின்ற பேரிடர்களிலிருந்து பாதுகாக்க அலையாத்திக்காடுகள் உகந்தது என்று தெரிய வந்துள்ளது. இவ்வகைக் காடுகள் கடல் அலைகளின் வேகத்தைத் தடுத்து நிறுத்துகிறது. அலைகளின் சீற்றத்தையும் மண்அரிப்பையும் கட்டுப்படுத்துகின்றன. காடுகளின் வளர்ப்பு அதிகரிப்பதால் $CO_2$ ஆல் ஏற்படுகின்ற மாசுவையும் குறைத்து விடுகின்றது.

வேதிப்பொருட்களைப் பயன்படுத்தி தயாரிக்கப்படுகின்ற பூச்சிக் கொல்லி மற்றும் களைக்கொல்லி மருந்துகளைத் தவிர்த்து உயிரிபூச்சிகொல்லி மற்றும் களைக்கொல்லிகளைப் பயன்படுத்தவேண்டும். பெட்ரோல் டீசல் போன்றவற்றிலிருந்து வெளிவரும் மாசுகளைத் தவிர்க்க தனிநபர் பயன்படுததும் வாகனங்கள் குறைத்து மாசுப்படுத்தாத சூரிய ஆற்றல் மற்றும் ஹைட்ரஜன் ஆற்றலைப் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு புவிவெப்பமடைதல் பருவ நிலை மாற்றத்தால் ஏற்படும் விளைவுகளைத் தவிர்ப்போம்.

☞ டயர், பிளாஸ்டிக் போன்ற பொருட்களை எரிக்காதிருப்போம்.
☞ பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதைக் குறைப்போம்.
☞ சுற்றுப்புறத்தை துய்மையாக வைத்திருப்போம் .
☞ கடலோரப் பேரிடர்களிடமிருந்து நம்மைப் பாதுகாக்க அலையாத்திக் காடுகள் வளர்ப்போம்.
☞ ஒரு வீட்டிற்கு நான்கு மரங்கள் வளர்த்து, இயற்கையான முறையில் கார்பன் டை ஆக்சைடு குறைக்க உதவுவோம்.
☞ சிறுதுாரப் பயணங்களுக்கு மிதிவண்டி (சைக்கிள்) யைப் பயன்படுத்துவோம்.
☞ சூரிய ஒளியைப் பயன்படுத்தும் விளக்குகள் மற்றும் தண்ணீர் சூடாக்கும் கருவிகளைக் பயன் படுத்துவோம்.

**பிளாஸ்டிக் பொருட்களை**

மறுத்து விடுங்கள்(Refuse)
மறுபடி பயன்படுத்துங்கள் (Reuse)
மறுசுழற்சி செய்யுங்கள் (Recycle)
மட்டுப்படுத்துங்கள் (Reduce)

காட்டுவளம் பெருக்குவோம்!
நாட்டுயர்வைப் பேணுவோம்!

வணக்கத்துடன்
ஆகாயம் அணி
இளம் விஞ்ஞானிகள்,
குமரி அறிவியல் பேரவை

விளம்பரம் அன்பளிப்பு